



ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஆணையம் (UNHCR) நடத்தும் உலக புலம்பெயர்ந்தோர் தினம் விழா சென்னை, தி.நகர் ஹோட்டல் ரெசிடென்ட்சியில் நடைபெற்றது இதில் கழக துணை பொதுச் செயலாளர், கனிமொழி கருணாநிதி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் இலங்கை தமிழர்கள் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலனை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு சமூக நல திட்டங்களை பட்டியலிட்டு சிறப்புரை ஆற்றினர். இந்நிகழ்ச்சியில் – UNHCR–ன் தூதரகத்தின் துணை தலைவர் மார்கரெட் வீன்மா அதிகாரிகள் , வள்ளலார் , சச்சிதானந்தவளன், மூத்த பத்திரிகையாளர் முனைவர். ஆர். கே. ராதாகிருஷ்ணன், ஸ்டார்ட் அப் தமிழ்நாடு, தலைமை நிர்வாக அதிகாரி சிவராஜா ராமநாதன், நேஹா, பார்வதி மீரா, விஜிதரன், சண்முகராஜா, ஜான்சன் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (20.06.2025) செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், 55வது இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, மருத்துவ மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி விழா பேருரையாற்றினார். இவ்விழாவில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன். திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி, செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அரசு, துணை முதல்வர் மரு.அனிதா, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.ஜோதி குமார் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், மருத்துவ மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் உடனிருந்தனர்.

## முதல்வர் மருந்தகம் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது!

# பாக்கெட் உணவு வகைகள் - விற்கப்படுவதாக கூறப்படும் செய்திகளில் உண்மை இல்லை!

### சந்தை விலையைக் காட்டிலும் 10 முதல் 90 விழுக்காடு குறைவான விலையில் விற்கப்படுகின்றன!

சென்னை, ஜூன் 21-

முதல்வர் மருந்தகம் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்றும் பாக்கெட் உணவு வகைகள் விற்கப்படுவதாக கூறப்படும் செயல்களில் உண்மை இல்லை என்றும் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து முதல்வர் மருந்தகம் குறித்து நாளிதழில் வெளிவந்த தவறான செய்தி குறித்த மறுப்பறிக்கை வருமாறு:-

முதல்வர் மருந்தகங்களில் பாக்கெட் உணவுப் பொருட்கள் மற்றும் மாவு வகைகள் விற்கப்படுவதாகவும் வாடிக்கையாளர் வரத்து குறைவாக உள்ளதாகவும் மக்கள் எதிர்பார்க்கும் மருந்து வகைகள் கிடைக்காத நிலை உள்ளதாகவும் நாளிதழ் ஒன்றில் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் ஆயிரம் முதல்வர் மருந்தகங்கள் உயிர் காக்கும் ஜெனரிக் மருந்துகள், நியூட்ராசுட்டிக்கல்ஸ், இந்திய மருந்துகள், சர்ஜிக்கல்ஸ் மற்றும் பிராண்டட் மருந்துகளை சந்தை விலையைக் காட்டிலும் 70 முதல் 90 விழுக்காடு குறைவான விலையில் விற்பனை செய்து வருகின்றன.

மருந்தகங்கள் துவங்கிய பிப்ரவரி மாதத்தில் நாளொன்றுக்கு சுமார் 300 ரூபாய் சராசரி மருந்து விற்பனை இருந்த நிலையில் இருந்து தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 800 ரூபாய்க்கு மேல் விற்பனை நடைபெற்று வருகிறது. மேலும் துவக்கத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 5 நபர்கள் ஒவ்வொரு மருந்தகத்திற்கும் வந்து கொண்டிருந்த நிலையில் தற்பொழுது நாளொன்றுக்கு சராசரியாக 20 நபர்கள் மருந்துகளை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

இதுவரை சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பிலான ஜெனரிக் மருந்துகளும் 2 கோடி ரூபாய் மதிப்பிலான பிராண்டட் மருந்துகளும் முதல்வர் மருந்துவங்கள் வாயிலாக மிக குறைந்த விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மருந்தகத்திலும் 219 ஜெனரிக் மருந்துகளும், 170 பிராண்டட் மருந்துகளும் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல் அந்தந்தப் பகுதிகளின் தேவைக்கேற்பத் தேவைப்படும் பிற மருந்துகளையும் அந்தந்த மாவட்டங்களிலேயே கொள்முதல் செய்து 24 மணி நேரத்தில் பொதுமக்களுக்குக் கொண்டு சேர்க்கும் நடைமுறையும் அண்மையில் கொண்டுவரப்பட்டுள்ளது.

முதல்வர் மருந்தகங்கள் நடத்தும் தொழில் முனைவோர் மற்றும் கூட்டுறவு சங்க மருந்தாளுனர்களுக்கு லாபத்தில் வழங்கப்பட்டு வந்த பங்குத்தொகையும் அதிகரிக்கப்பட்டு 75 சதவீதம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. விடுமுறை தினங்களில் பணிபுரியும் மருந்தாளுனர்களுக்கு ரூபாய் 1000 வரை ஊக்க தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு முதல்வர் மருந்தகங்கள் சிறப்பாக செயல்பட எல்லா விதமான நடவடிக்கைகளையும் கூட்டுறவுத்துறை எடுத்து வருகின்றது.

எனவே, பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாக்கெட் உணவு வகைகள் விற்கப்படுவதாக கூறப்படும் செய்திகள் உண்மை இல்லை.

இவ்வாறு செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! யோகப்பிரியா - சி.மகேஷ்குமார் - கூ.பி.ஜெயின் தலைமையில்

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் 'செம்மொழி நாள்' - 5000 நபர்களுக்கு அறுசுவை விருந்து!

### அமைச்சர் அர.சக்கரபாணி வழங்குகிறார்!

*சென்னை, ஜூன். 21-*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக, கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி மற்றும் வில்லிவாக்கம் மேற்கு பகுதி சார்பில், ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்தநாள் "செம்மொழி நாள்" விழாவை முன்னிட்டு 5000 நபர்களுக்கு அசைவ உணவு விருந்தினை -உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கி சிறப்பிக்கிறார்.*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக, கொளத்தூர் கிழக்கு மேற்கு மற்றும் வில்லிவாக்கம் மேற்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு "செம்மொழி -16" உண்ண வைத்து மகிழ்வோம்! உடன் பிறப்பாய் நெகிழ்வோம்!! எனும் தலைப்பில் 5000 நபர்களுக்கு அசைவ விருந்து வழங்கும் விழா 22.06.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று நண்பகல்: 11.00 மணி, கொளத்தூர் கிழக்கு பகுதி 66வது வார்டில் மாமன்ற உறுப்பினர் யோகப் பிரியா தனசேகர் தலைமையிலும், நண்பகல் 11.45 மணி, கொளத்தூர் மேற்கு பகுதி 69 வது வார்டில் தலைமை செயற்குழு உறுப்பினர் சி. மகேஷ் குமார் அவர்கள் தலைமையிலும், நண்பகல் 12.30 மணிக்கு வில்லி வாக்கம் மேற்கு பகுதி 94வது வார்டில் மண்டல குழு தலைவர், பகுதி கழகச் செயலாளர் கூ.பீ. ஜெயின் அவர்கள் தலைமையிலும் அசைவ விருந்து உணவு வழங்கப்படுகிறது.*

*இம்மூன்று இடங்களிலும் வழங்கப்படும் அசைவ உணவு விருந்து வழங்கும் விழாவில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திரு.பி.கே சேகர்பாபு, பகுதி கழகச் செயலாளர்கள் ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ. நாக ராஜன்.எம்.சி, வே. வாசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இம்மூன்று இடங்களிலும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அசைவ உணவு விருந்தினை வழங்கி சிறப்பிக்கின்றார்.*

*இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி.எம்பி, இரா.கிரிராஜன் எம்.பி, அ.வெற்றி அழகன்.எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.சந்துரு, இரா. விடுதலை, ஒ.ஏ.நாக லிங்கம், சரிதா மகேஷ் குமார், தேவஜவகர், வானவில் விஜய், எஸ் பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன். சுதா தீனதயாளன், எஸ்.தனசேகர், துரைக்கண்ணன், ஆர் எஸ் சித்திக், ம. அசோக் குமார், எம். தாவுத்பீ. எம்.சி, அமுதா பொன்னி வளவன்.எம் சி, ஸ்ரீதணி எம்.சி கொளத்தூர் கிழக்கு-மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: பி. ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ். முருகன், எம்.டி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி. பாபு, பி.அதிபதி. வில்லிவாக்கம் மேற்கு-கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள்: சிட்கோ சி. சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகு பாபு, ஜெ.தங்கராஜ், எ. வேதா, சீ.வீக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*





